**சுற்றறிக்கை எண் I/340859/2025, நாள் 19-08-2025**

**தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து தேர்வு எழுதும் தேர்வர்கள்,**

**தேர்வு மையம்/ முதன்மை கண்காணிப்பாளர்கள்**

**கவனத்திற்கு**

பொருள்: தேர்வுப்பிரிவு – தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் – அரசு வணிகவியல் தேர்வு – ஆகஸ்டு 2025 அரசு வணிகவியல் தேர்வு மையங்களில் அணி மாற்றம் செய்வது – தொடர்பாக.

*****

இத்துறையின் மூலம் வருடத்திற்கு இரண்டு முறை அரசு வணிகவியல் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. நடைபெறவிருக்கும் ஆகஸ்டு 2025 வணிகவியல் தேர்விற்கு விண்ணப்பித்து, 03.08.2025 தேதிக்கு பின்பு அறிவிக்கப்பட்ட நேர்காணல்கள் மற்றும் தேர்வுகளை மேற்கொள்ளும் மாணாக்கர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தங்களுக்கு அளிக்கப்படும் நுழைவுச் சீட்டில் தெரிவிக்கப்படும் தட்டச்சு தேர்வு மையங்களில் 28.08.2025 அன்று காலை 10.00 மணி முதல் 04.00 மணி வரையிலும் மற்றும் 29.08.2025 அன்று காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிக்குள் தங்களது அணி மாற்றத்தை செய்து கொள்ளலாம்.

மேலும், விண்ணப்ப திருத்தம் செய்ய அனுமதிக்கப்பட்ட 03.08.2025 தேதிக்கு முன் அறிவிக்கப்பட்ட நேர்காணல்கள் மற்றும் தேர்வுகளை மேற்கொள்ளும் மாணாக்கர்கள் தேர்வு அணி மாற்றம் தேவைப்பட்டால் ஐந்து மடங்கு அபராதத் தொகையினை வங்கி வரைவோலை "Additional Director of Technical Education (Exams), Chennai" என்ற பெயரில் எடுத்து தேர்வு மையத்தில் விண்ணப்பித்து அணி மாற்றம் செய்து கொள்ளலாம்.

தட்டச்சு இயந்திர எண் மாற்றம் செய்ய, கட்டணம் ஏதும் செலுத்தாமல் 28.08.2025 மற்றும் 29.08.2025 ஆகிய தேதிகளில் தேர்வு மையங்களில் மாற்றிக் கொள்ளலாம். தேர்வு நடைபெறும் போது தட்டச்சு இயந்திரத்தில் பழுது ஏற்பட்டால் கட்டணம் ஏதும் செலுத்தாமல் தேர்வு மைய முதன்மை கண்காணிப்பாளர் அனுமதியுடன் தட்டச்சு இயந்திரத்தை மாற்றிக் கொண்டு அதற்கான கடிதம் தவறாமல் சமர்ப்பிக்க வேண்டும்.

இது தவிர முழுமையாக சமர்ப்பித்த சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வு விண்ணப்பங்களில் வேறு ஏதும் விண்ணப்பப்பிழை மாற்றத்திற்கு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் ஐந்து மடங்கு கட்டணம் செலுத்தி, உரிய ஆவணங்களை சமர்ப்பித்து, 22.08.2025 நண்பகல் 12.00 மணிக்குள் மாற்றிக் கொள்ளலாம் மற்றும் தட்டச்சு தேர்வு விண்ணப்பங்களில் ஏதேனும் விண்ணப்பப்பிழை இருப்பின் அதனை இயக்ககத்தில் ஐந்து மடங்கு

கட்டணம் செலுத்தி, உரிய ஆவணங்களை சமர்ப்பித்து, 29.08.2025 நண்பகல் 12.00 மணிக்குள் மாற்றிக் கொள்ளலாம்.

சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வுகளுக்கு 22.08.2025 நண்பகல் 12.00 மணிக்குப் பின் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திலும் தட்டச்சு தேர்வுகளுக்கு 29.08.2025 நண்பகல் 12.00 மணிக்குப் பின் தேர்வு மையங்களிலும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திலும் மேற்கூறியவற்றிற்கு தேர்வுப் பணி காரணமாக எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஓம்/-
J.INNOCENT DIVYA
தேர்வு வாரியத் தலைவர்

Digitally signed by
RAMARATHNAM RAMASWAMY
Date: 19-08-2025 12:52:05